1984 மார்ச் 27]

அளவிற்கு சூரிய விசையைப் பெற வேண்டுமானால் அதற்கு ஆகும் தொகை, எஸ்டிமேட்டட் காஸ்ட் எவ்வளவு ஆகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன். அந்த விவரங்களை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் ஆயில் இன்ஜின் அல்லது எலக்டிரிக் பம்ப் ஆகியவற்றிற்கு ஆகும் செலவை விட குறைந்த செலவு ஆகும் என்றே கணக்கிடப்பட்டு இருக்கிறது.

தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கான உச்சவரம்பு.

*357—(வினா எண். 20473) திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு, உயர்ந்த பட்ச முதலீட்டுத் தொகையை அரசு வரையறுத்திருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு முதலீட்டுத் தொகைக்கு உயர்ந்த பட்ச வரையறை இல்லை. தமிழகத்தில் மைய மற்றும் மாநில அரசு மூலதன மானிய திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் துவங்கப்படும் தொழில்கள் அனைத்தும் அவைகளின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இவற்றில் எது குறைவோ அதை மானியமாகப் பெறத் தகுதியுடையவையாகும். இது தவிர, இன்னும் 52 வட்டங்களில் மைய அரசு 10 சதவீத மானியம் அளிக்கிறது. இதற்கான உச்சவரம்பு ரூ. 10 இலட்சம் ஆகும்.

சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைக்கு ஊதியம் வழங்கும் திட்டம்.

*358—(வினா எண். 21178) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைகளுக்கு அரசு ஊதியம் ஏதும் வழங்குகிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில், எப்போது அவ்வூதியம் நிர்ணயிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தில் உள்ள சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைக்கு அரசு ஊதியம் வழங்கும் திட்டம் பஞ்சாப் மற்றும் டெல்லி சிறைகளில் உள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் சேலம் மத்திய சிறையில் முதலாவதாக இந்த ஊதிய ஈட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் வேலை செய்த சிறைவாசிகளுக்குக் கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்கப்பட்டது :

1. தேர்ச்சி பெற்றவர்கள்—40 பைசா ஒரு நாள் வேலைக்கு.

2. அரைத் தேர்ச்சி பெற்றவர்கள்—20 பைசா ஒரு நாள் வேலைக்கு.

3. தேர்ச்சி பெறாதவர்கள்—10 பைசா ஒரு நாள் வேலைக்கு.

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படியும், ஏழாம் நிதிக் குழுவின் கீழ் மத்திய அரசு வழங்கிய நிதியுதவியைக் கொண்டும், அரசு ஆணைப்படி 1982-ல் ஊதிய ஈட்டுத் திட்டம் சென்னை, வேலூர், திருச்சி, கோவை, மதுரை, கடலூர் மற்றும் பாளையங்கோட்டையில் உள்ள பிற மத்திய சிறைகளுக்கும் மற்றும் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் விரிவு படுத்தப்பட்டது. மேற்படி சிறைகளில் இத்திட்டம் 1—11—1982 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு இந்த ஊதியத்தை 17—7—1982 ஆம் நாளிட்ட ஆணையில் கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளது :

தேர்ச்சி பெற்றவர்கள்	..	ரூ 1.00 ஒரு நாள் வேலைக்கு.
அரை தேர்ச்சி பெற்றவர்கள்	..	ரூ 0.50 ஒரு நாள் வேலைக்கு.
தேர்ச்சி பெறாதவர்கள்	..	ரூ. 0.25 ஒரு நாள் வேலைக்கு.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த ஊதிய விகிதங்கள் மீண்டும் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ? சிறையில் இருந்து அவர்கள் வெளியே வந்தபிறகு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக தனியார் நிறுவனங்கள் ஏதேனும் செயல்படுகிறதா ? அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் உதவி செய்கிறதா ?

1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்த ஊதிய விகிதங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற சோரிக்கையின் அடிப்படையில் தான் 17—7—1982 முதல் அந்த அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது. சிறையில் இருந்து விடுதலை பெற்று வருகிற குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு அரசின் நிறுவனங்கள் மூலமாகவும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் கடன் உதவித் தொகை 'பார் செல்ப்-எம்ப்ளாயின்ட்மென்ட்' என்ற அடிப்படையில் தரப்படுகிறது. இந்த வகையில் அரசு அவர்களின் பிரச்னையை அணுகி செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சிறையில் கைதிகள் தண்டனை அனுபவிக்கிறபோது, அவர்களுக்கு உணவு மற்றும் இதர வசதிகளைக் கொடுப்பது அரசின் பொறுப்பு. ஆனால் அவர்கள் சிறையில் உழைப்பு நல்கினால் அவர்கள் வெளியே அத்தகைய பணிகளைச் செய்தால் எந்த அளவிற்கு ஊதியம் கொடுக்கப்படுமோ அந்த அளவிற்கு சிறையிலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சமீபத்தில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறதே, அதை அரசு பரிசீலனை செய்து, அந்த அடிப்படையில் கூலியை உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அளவிற்கு வெளியில் பெறுகின்ற கூலியைப் பெறும் அளவிற்கு அந்தப் பணியின் தன்மையும் உயர்ந்து இருக்க வேண்டும். There is no adequate infras ructural faciliti s என்ற காரணத்தால் தற்போது அதைப் பரிசீலிக்க முடியாது. ஆகவே, அவர்களுடைய பணியை இன்னும் அதிகமாக ஆக்கி அந்த அடிப்படையில் இன்னும் ஊதியம் உயர்த்திக் கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, சிறைக் கைதிகளுக்கு மறுவாழ்வு செய்வது குறித்து நல்ல எண்ணத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறைக் கைதிகள் விடுதலைப் பெற்று வெளியே வருகின்றபோது சிறையில் இருந்து நற்சான்றிதழ் பெற்று வருகிறார்கள். ஆனால் அவர்கள் அரசாங்கத்தின் மூலம் வேலை பெறுகிறபோது மறுபடியும் அவர்களை விசாரிக்க காவல் துறைக்கு அனுப்பப்படுகிறது. அங்கே அவர்களைப் பற்றி ஏற்கனவே உள்ள குறிப்பின் அடிப்படையில் அவன் கேடி, சிறையில் இருந்தவன், ஆகவே, மறுபடியும் தவறு செய்யக்கூடும் என்று அறிக்கை தருவதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, சிறையில் இருந்து நற்சான்றிதழ்

1984 மார்ச் 27]

பெற்று வந்தாலே போதும், மறுபடியும் அவர்களைப் பொறுத்த வரையில் போலீஸ் வெரிபிகேஷன் தேவையில்லை என்று அரசு உத்தரவு வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் நல்ல யோசனையை அரசு ஏற்கனவே ஆய்ந்து நடைமுறைக்குக் கொண்டு வர உள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, சிறையிலிருந்து கைதிகளை கோர்ட்டுக்கு அழைத்து வரும்போது அவர்களுக்கு ஒரு வேளைக்கு 75 காசுதான் உணவுக்காகக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த நாளில் விலைவாசிக்கு ஏற்ப 75 காசு என்பதை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை).

பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகளைத் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கும் திட்டம்

*474—(வினா எண். 18287) திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகள் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. பூ. மு. நரசிம்மன் : தலைவரவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்தில் 5 பேர்கள் சேர்ந்து செய்யக்கூடிய தொழில் ஒன்றும் இல்லை என்பதை அரசு நன்கு அறியும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களை பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கூறும்போது குறிப்பிட்டதைப்போல மத்திய அரசு மானியமும், மாநில அரசு மானியமும் ஒருங்கே வரக்கூடிய பகுதிகள் சிலவற்றை மத்திய அரசு மானியத்திற்கு மட்டும் தகுதி உடையவை என்று அறிவித்து, மாநில அரசு மானியத்தை மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில்